செய்தி வெளியீடு எண்:-228 நாள்:- 24.04.2017

பத்திரிக்கை செய்தி

தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடு பெற அரசு இ–சேவை மூலம் விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மேற்பார்வையின் கீழ், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு குழுக்கள் ஆகியவற்றின் வாயிலாக தற்பொழுது 10,000 மேற்பட்ட அரசு இ–சேவை மையங்கள் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. பொது மக்களுக்கு அரசின் சேவைகளை நேர்த்தியாகவும், வெளிப்படையாகவும் அவர்களது இருப்பிடத்திற்கு அருகிலேயே அளிப்பது இதன் நோக்கம் ஆகும்.

மின் ஆளுமை மூலம் அரசின் அனைத்து சேவைகளும் மக்களின் இல்லத்திற்கே சென்றடைய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12(1)(சி) ன் கீழ் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சேர்க்கைக்கு அரசு இ–சேவை மையங்கள் மூலமாகவும் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**விண்ணப்பம் செய்யத் தேவையான சான்றிதழ்கள்**

1. குழந்தையின் ஒளிப்படம் (Photo)
2. பிறப்புச் சான்று (பின்வருனவற்றுள் ஏதாவது ஒன்று)
   - பிறப்புச் சான்று (Birth Certificate)
   - மருத்துவமனை உதவியாளர் மற்றும் மருத்துவச்சிப் பதிவேடு நகல் (Hospital Auxiliary and Midwife register )
   - அங்கன்வாடி பதிவேடு நகல் (Anganwadi record )
   - பெற்றோர் அல்லது பாதுகாவலர் குழந்தையின் பிறந்த தேதி குறித்து வழங்கிய உறுதி மொழி (Declaration through an affidavit of the age of the child by the Parent / Guardian)

3. இருப்பிடச் சான்று (ஏதேனும் ஒன்று)

- குடும்ப அட்டை (Family Card )
- வாக்காளர் அடையாள அட்டை (Voter ID)
- ஆதார் அட்டை (Aadhar Card)
- ஓட்டுநர் உரிமம் (Driving License)
- வங்கி கணக்கு புத்தகம் (Bank Passbook)
- தொலைபேசிக் கட்டண ரசீது (Telephone Bill )
- வருமான வரி நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card)
- இருப்பிடம் சார்ந்து கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று (Certificate of Residence issued by VAO)
- மாநில அரசு/ மத்திய அரசு/ பொதுத்துறை நிறுவனங்கள் வழங்கிய அடையாள அட்டை (ID card issued by State Government/ Central Government/ Public Sector Undertaking)

4. பிற சான்றுகள் (ஏதேனும் ஒன்று)

- நலிவடைந்த பிரிவில் சேர்க்கை கோருபவர்களுக்கு
  - வருமான சான்று
- வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவில் சேர்க்கை கோருபவர்களுக்கு
  - சாதிச் சான்றிதழ்
- வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவில் சேர்க்கை கோருபவர்களுக்கு
  - ஆதரவற்றவர் / எச்.ஐ.வி ஆல் பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / மாற்றுத் திறனாளிகள் / துப்புரவுத் தொழிலாளியின் குழந்தை எனில் அதற்கான சான்று

மேற்படி, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12(1)(சி) ன் கீழ் 2017–2018ஆம் கல்வியாண்டிற்கு சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீடு பெறுவது சம்மந்தமாக விண்ணப்பிக்க பொதுமக்கள் தங்களது இல்லங்களுக்கு அருகாமையில் உள்ள இ-சேவை மையங்களை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், 2017–2018ஆம் கல்வியாண்டிற்கு இ-சேவை மையங்கள் வாயிலாக மே 18ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்செயலகம், சென்னை-9.